11 30863

தமிழ்நாடு அரசு
சுருக்கம்

19 JUL 2004

…ணியமைப்பு – கைத்தறி மற்றும் துணிநூல் துறை – தமிழ்நாடு கைத்தறி மற்றும் நெசவு சார்நிலைப் …ணிகளில் அடங்கியுள்ள கைத்தறி ஆய்வாளர் பதவியில் நேரடி நியமனத்திற்கு தொழில்நுட்ப கல்வி …க்ககத்தால் வழங்கப்படும் டிப்ளமா இன் டெக்ஸ்டைல்ஸ் பிராசஸிங் மற்றும் டிப்ளமா இன் மேன்மேட் …பர் டெக்னாலஜி (Diploma in Textile Processing and Diploma in Man made Fibre Technology) …கிய பட்டயப் படிப்புகளை கைத்தறி ஆய்வாளர் பதவிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள கல்வித் …குதிகளுக்கு இணையாக கருதுதல் – ஆணை வெளியிடப் படுகிறது.

---

கைத்தறி, கைத்திறன், துணிநூல் (ம) கதர் (இ2) துறை

…அரசாணை (நிலை) எண்.69

நாள் 27.07.2004
தாரண, ஆடி 12
திருவள்ளுவராண்டு 2035
படிக்க:

செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் கடித எண்.4641 / ஆர் / என்டி / எஃபி 1 / 98, நாள் 31.12.2003.

----

ஆணை:–

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், தமது கடிதத்தில் தமிழ்நாடு கைத்தறி மற்றும் நெசவு சார்நிலைப் பணிகளில் அடங்கியுள்ள "கைத்தறி ஆய்வாளர்" பதவியில் நேரடி நியமனத்திற்கு விண்ணப்பத்திருந்த சில விண்ணப்பதாரர்கள் பெற்றுள்ள கல்வித் தகுதிகளை அப்பதவிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள கல்வித் தகுதிகளுக்கு பொது பணிகளில் வேலை வாய்ப்பிற்காக இணையாகக் கருதுதல் சம்பந்தமான பொருளானது கீழ்க்காணும் பாடத் திட்டங்களுடன் தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், சென்னைப் பல்கலைக் கழகப் பதிவாளர் மற்றும் துறைத் தலைவராகிய கைத்தறி (ம) நெசவு ஆணையர் ஆகியோரின் கருத்துக்களுடனும் 18.12.2003 அன்று நடைபெற்ற இணைக் கல்வித் தகுதி நிர்ணய பரிசீலிப்புக் குழுக் கூட்டத்தில் பரிசீலனைக்கு வைக்கப்பட்டது என்று தெரிவித்துள்ளது.

1. Diploma in Textile Processing - Directorate of Technical Education
2. B.Sc., Bio Chemistry - University of Madras
3. Bachelor of Bank Management - University of Madras
4. Diploma in Man-made Fibre Technology - Directorate of Technical Education
5. B.Sc., Special Chemistry - Madurai Kamaraj University
6. B.Sc., Chemistry, Physics - Avinashilingam Institute for Home Science and Higher Education for Women (Deemed University), Coimbatore.

மேலும், தீவிர பரிசீலனைக்குப் பின்னர், தொழில் நுட்பக் கல்வி இயக்ககத்தால் வழங்கப்படும் "டிப்ளமா இன் டெக்ஸ்டைல்பிராசஸிங்" மற்றும் டிப்ளமா இன்மேன்–மேட் பைபர் டெக்னாலஜி (Diploma in Textile Processing and Diploma in Man-Made Fibre Technology) ஆகிய பட்டயப் படிப்புகளை தமிழ்நாடு கைத்தறி மற்றும் நெசவு சார்நிலைப் பணிகளில் அடங்கியுள்ள "கைத்தறி ஆய்வாளர்" பதவிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள கல்வித் தகுதிகளுக்கு இணையாகக் கருத பரிந்துரைக்கலாம்" என்று குழு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது என்றும் தெரிவித்துள்ளது.

3) மேலும், இக்குழு பின்வரும் தீர்மானத்தையும் நிறைவேற்றியுள்ளதாக தெரிவித்துள்ளது.

"The Committee has decided to recommend deletion of the second half of eligibility criteria (Viz., B.Com., or B.Sc., Degree in Chemistry of any University or Institution recognized by U.G.C. for the purpose of its grants) for appointment to the post of Handloom Inspector. In view of the above, the qualifications indicated at Sl. Nos. 2,3,5 & 6 i.e., B.Sc., Bio-Chemistry offered by University of Madras, Bachelor of Bank Management offered by University of Madras, B.Sc., Special Chemistry Physics offered by Madurai Kamaraj University and B.Sc.,Chemistry offered by Avinashilingam Institute for Home Science and Higher Education for Women (Deemed University), Coimbatore, respectively are not recommended

4) எனவே, இதுசம்பந்தமான தமிழ்நாடு கைத்தறி நெசவு சார்நிலைப் பணிகளில் அடங்கியுள்ள கைத்தறி ஆய்வாளர் பதவிக்கு கல்வித் தகுதி சம்பந்தமாக ஆணைகள் வெளியிடுமாறு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் செயலர் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

5) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் பரிந்துரைகளை அரசு கவனமாக பரிசீலனை செய்தது. தீவிர பரிசீலனைக்குப் பின்னர் தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தால் வழங்கப்படும் டிப்ளமா இன் டெக்ஸ்டைல்ஸ் பிராசஸிங் மற்றும் டிப்ளமா இன் மேன்மேட் பைபர் டெக்னாலஜி (Diploma in Textile Processing and Diploma in Man made Fibre Technology) ஆகிய பட்டயப் படிப்புக்களை தமிழ்நாடு கைத்தறி மற்றும் நெசவு சார்நிலைப் பணிகளில் அடங்கியுள்ள "கைத்தறி ஆய்வாளர்" பதவிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள கல்வி தகுதிகளுக்கு இணையாக கருதலாம் என அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

13



6) மேலும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கருத்தினை ஏற்று அரசு பின்கண்டவாறும் ஆணையிடுகிறது.

The Government order for the deletion of the second half of eligibility Criteria (Viz., B.Com (or) B.Sc., Degree in Chemistry of any University (or) Institution recognized by UGC for the purpose of the grants ) for appointment to the post of Handloom Inspector and inview of the above the Qualifications (i.e) B.Sc., Bio Chemistry offered by University of Madras, Bachelor of Bank Management (BBM), offered by University of Madras, B.Sc., Special Chemistry, offered by Madurai Kamaraj University, and B.Sc., Chemistry Physics offered by Avinashilingam Institute for Home Science and Higher Education for Women (Deemed University), Coimbatore respectively are not recommended

7. இவ்வாணை உயர் கல்வி மற்றும் பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறைகளின் அ.சா.கு.15516/எச்.1/ 2004-1, நாள் 14.07.2004 (மற்றும்) அ.சா.கு. 36311/ஆர்/2004-1 நாள் 01.07.2004ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

அ.இளங்கோவன்,
அரசு செயலாளர்

பெறுநர்
செயலாளர்,
தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-2
கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையர், சென்னை-108
நகல்:
உயர்கல்வித் (எச்1) / கே /துறை, சென்னை - 9
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, சென்னை -9
மாண்புமிகு அமைச்சர் (கைத்தறி மற்றும் துணித்தொழில்)
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை -9
உதிரி / இருப்புக்கோப்பு

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர் 27/7/04